සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved History

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 8

வரலாறு

சுட்டெண் :

நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **1 – 5 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. தாமரைப் பொய்கை எங்கே அமைந்துள்ளது?
1. அநுராதபுரம் 2. பொலன்னறுவை 3. மிஹிந்தலை 4. ரஜகல

02. இரண்டாம் இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்துக்கு அரசனாகுவதற்கு முன் எவ்வாறு அழைக்கப்பட்டான்?
1. மகா அஸ்தான 2. டிக்கிரி குமாரன் 3. கண்ணசாமி 4. முத்துசாமி

03. இத்தாலியில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்று,
1. ஒக்ஸ்போர்ட் 2. கேம்பிரிஜ் 3. பரிஸ் 4. பாதுவா

04. பேர்டினன்ட் கோடேஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசம் யாது?
1. பேரு 2. சென்த்லோரன்ஸ் 3. மெக்சிகோ 4. பிலிப்பைன்ஸ்

05. முல்லேரியாப் போரில் தோற்கடிக்கப்பட்ட ஐரோப்பிய இனத்தவர் யாவர்?
1. போர்த்துக்கேயர் 2. ஒல்லாந்தர் 3. ஆங்கிலேயர் 4. பிரான்ஸியர்

- **6 – 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் முன்னால் அடைப்பினுள் இடுக.**

06. ருவன்வெலிசாயவில் பாதிகாபய மன்னனின் சிலை காணப்படும். (.....)

07. சீதாவக்கை ராஜசிங்க மன்னனால் வீரசுந்தர பண்டார கொலை செய்யப்பட்டான். (.....)

08. கண்டி இராச்சியத்துக்கு வந்த ஜோன் பைபஸ் என்பவன் ஒல்லாந்த இனத்தைச் சேர்ந்தவன் ஆவான். (.....)

09. மைக்கல் ஆஞ்சலோ என்பவரால் இறுதித் தீர்ப்பு எனும் ஓவியம் வரையப்பட்டது. (.....)

10. ஒல்லாந்தரால் தமது ஆட்சிப் பிரதேசங்களில் பரிஸ் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. (.....)

Past Papers Wiki

- **11 – 15 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடைகளை இடைவெளியில் எழுதிப் பூரணப்படுத்துக.**

11. மகாசேன மன்னனால் ..... தூபி நிர்மாணிக்கப்பட்டது.

12. தெல்கமு விகாரையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த புனித தந்த தாதுவைக் கொண்டு வந்து கண்டியில் பிரஷ்டை செய்த மன்னன் ..... ஆவான்.

13. உரோம நாகரிகம் வீழ்ச்சியடைந்ததும் அதன் பின்னரான ஆயிரம் ஆண்டுகள் ஐரோப்பாவில் ..... காலம் என அழைக்கப்பட்டது.

14. ஸ்பானியா ..... குடாநாடுகளில் அமைந்துள்ள மிகப்பெரிய நாடாகும்.

15. போர்த்துக்கேயர் இலங்கையை ..... என அழைத்தனர்.

- **16 – 20 வரையான வினாக்களுக்கு நிரல் I இனை நிரல் II உடன் இணைப்பதனூடாகப் பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.**

16.

நிரல் I	நிரல் II
1. மாததுகம வாவி	A - ஹுருளுவாவி
2. மயென் வாவி	B – மகாவிலாச்சியா குளம்
3. ஜல்லூர வாவி	C – மடாடுகம வாவி
4. மணிஹிர வாவி	D – மின்னேரியா வாவி

1. ABCD 2. BCAD 3. BADC 4. CBAD

17.

நிரல் I	நிரல் II
1. தந்துரே	A – ஜெரோலோபேஸ் த சூசா
2. பலன	B – தொன் ஜெரனிமோ த அசவேது
3. ரன்தெனிவெல	C – கொன்ஸ்தைந்து ஸா
4. கன்னொருவ	D – தியோகோ த மெல்லோ

1. ABCD 2. BCAD 3. CADB 4. DABC

18.

நிரல் I	நிரல் II
1. நிக்கலஸ் கொபர்னிகஸ்	A – குருதிச்சுற்றோட்டத் தொகுதி
2. வில்லியம் ஹார்வே	B – புரட்டஸ்தாந்தினர்
3. பெரசல்ஸ்	C – பூமி கோள வடிவமானது
4. இராஸ்மஸ்	D – நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்

1. ABCD 2. BCDA 3. CADB 4. DBAC

19.

நிரல் I	நிரல் II
1. போர்த்துக்கல்	A – ஹென்றி ஹட்சன்
2. ஸ்பெயின்	B – பார்த்தலோமியோ டயஸ்
3. இங்கிலாந்து	C – பிரான்சிஸ்கோ பிசாரோ
4. ஒல்லாந்து	D – க போட் சகோதரர்கள்

1. ACBD 2. BCDA 3. BDAC 4. DBAC

20.

நிரல் I	நிரல் II
1. கோட்டே	A – ஆறாம் விஜயபாகு
2. மலையகம்	B – பரராசசேகரன்
3. யாழ்ப்பாணம்	C – மாயாதுன்னை
4. சீதாவக்கை	D – சேனா சம்பத விக்ரமபாகு

1. ADBC 2. BDCA 3. CDBA 4. DCBA

(2x20=40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயம்.**
- **முதலாம் வினா உட்பட மொத்தம் 5 வினாக்களுக்கு விடையளிக்குக.**

(01) A) i. பின்வரும் உருவிலுள்ள கட்டடத்தின் பெயர் யாது?



ii. இதனைக் கட்டிய மன்னன் யார்?

iii. இக்கட்டடம் எங்கு அமைந்துள்ளது?

iv. இது எத்தனை மாடிகளைக் கொண்டு அமைந்திருந்தது?

(4 புள்ளிகள்)

B) i. இவ்வுருவிலுள்ள மன்னன் யார்?



ii. இவர் ஆட்சி செய்த இராச்சியம் யாது?

iii. இவர் அரசனாவதற்கு முன் எப்பெயரில் அழைக்கப்பட்டான்?

iv. இவர் எந்தப் பெயரில் கத்தோலிக்க சமயத்தைத் தழுவினார்?

(4 புள்ளிகள்)

C) i. இவ்வுருவிலுள்ள நபர் யார்?



ii. இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

iii. இவர் மரணித்த தீவுக் கூட்டம் எவ்வாறு அழைக்கப்படும்?

iv. இவரது கடற்பயணத்தின் மூலம் எதனைக் கண்டுபிடித்தார்?

(4 புள்ளிகள்)

D) i. இவ்வுருவில் F எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது ஆங்கிலேயரின் தாய் நாடாகும். இதனைப் பெயரிடுக.



ii. அத்திலாந்திக் சமுத்திரத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்து யாது?

iii. அமெரிக்கோ வெஸ்புசியின் தாய் நாடு B எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. இதனைப் பெயரிடுக.

iv. போர்த்துக்கல் நாடு எந்த ஆங்கில எழுத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது?

(4 புள்ளிகள்)

(02) i. மகாசேன மன்னன் கட்டிய குளங்கள் 3 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. கால்வாய்கள் வெட்டப்பட்டமைக்கான காரணங்கள் 2 குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

நிர்மாணிப்புக்கள்	**உதாரணம்**	**கட்டிய மன்னன்**
பூங்காக்கள்	B ……..	முட்ட சிவன்
A ……..	பத்மஸ்வர	D ……..
நீர்ப்பூங்கா	C ……..	காசியப்பன்

(4 புள்ளிகள்)

(03) i. அநுராதபுரக் கால போதிசத்துவர் சிலைகள் காணப்படும் இடங்கள் 3 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
ii. பொலன்னறுவைக் காலத்திற்குரிய ஓவியங்கள் காணப்படும் பிரதேசங்கள் 4 குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
iii. பின்வரும் உருவிலுள்ள பகுதிகளை இனங்கண்டு பெயரிடுக. (4 புள்ளிகள்)



(04) i. கண்டியை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த நாயக்க வம்ச ஆட்சியாளர்கள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
ii. கண்டி இராச்சிய காலத்தில் காணப்பட்ட விவசாய முறையின் பண்புகள் 2 தருக. (4 புள்ளிகள்)
iii. கண்டிக் காலத்திற்குரிய ஓவியங்கள் காணப்படும் இடங்கள் 4 தருக. (4 புள்ளிகள்)

(05) i. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பாவில் தோன்றிய பல்கலைக்கழகங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)
ii. உரோம கட்டடக்கலையில் காணப்பட்ட சிறப்பம்சங்கள் 2 இனைத் தருக. (4 புள்ளிகள்)
iii. பின்வரும் உருவிலுள்ள நபர்களை இனங்கண்டு பெயரிடுக. (4 புள்ளிகள்)


A .....


B .....


C .....


D .....

(06) i. நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கிய 3 நாடுகள் தருக. (3 புள்ளிகள்)
ii. ஐரோப்பியர் ஆசியாவுக்கு வருவதற்கான நோக்கங்கள் 2 ஐ குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
iii. பின்வரும் உருவினைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க. (4 புள்ளிகள்)



(07) i. இலங்கையில் கரையோரப் பிரதேசத்தை ஆட்சி செய்த 3 போர்த்துக்கேய படைத்தளபதிகளின் பெயர்களைத் தருக. (3 புள்ளிகள்)
ii. சீதாவக்கை இராசதானியின் எழுச்சிக்கான காரணிகள் 2 தருக. (4 புள்ளிகள்)
iii. இலங்கை மக்களைக் கத்தோலிக்க சமயத்துக்கு மாற்றுவதற்குப் போர்த்துக்கேயர் பின்பற்றிய நடைமுறைகள் 4 இனைத் தருக. (4 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025 **பாடம்** - வரலாறு (History)

விடைப்பத்திரம் - தரம் - 8

பகுதி – I

1. 2	6. ✓	11. ஜேதவனராமய	16. 4
2. 1	7. ✓	12. முதலாம் விமலதர்ம சூரியன்	17. 1
3. 4	8. X	13. மத்திய காலம்	18. 3
4. 3	9. ✓	14. ஐபீரியன்	19. 2
5. 1	10. X	15. சைலான்	20. 1

பகுதி – II

(01)

A) i. வைஜயந்த கட்டடம்/ பராக்கிரமபாகுவின் ஏழடுக்கு மாளிகை
ii. முதலாம் பராக்கிரமபாகு மன்னன்
iii. பொலன்னறுவையில்
iv. ஏழு

B) i. முதலாம் விமலதர்ம சூரியன் ii. கண்டி
iii. கொணப்பு பண்டார iv. தொன் யுவான்

C) i. மகலன் ii. ஸ்பானியா
iii. பிலிப்பைன் iv. உலகம் உருண்டையானது

D) i. பிரித்தானியா ii. D
iii. ஸ்பெயின் iv. A

(02) i. மின்னேரியா (மணிஹர), பானுவாவி (மகாகணதரா), ஹுருளுவாவி (ஜல்லூர வாவி)
ii.
- குளத்திலிருந்து பயிர் நிலங்களுக்கு நீரை கொண்டு செல்லல்.
- அணைக்கட்டிலிருந்து பயிர்களுக்கு நீரை கொண்டு செல்லல்.
- குளத்திலிருந்து குளத்திற்கு நீரை கொண்டு செல்லல்.

iii. A - நந்தவனம்
B - மகாமேகவனம்
C - சீகிரியா
D - குட்டகர்ணதிஸ்ஸ

(03) i. தம்பேகொட/ புதுலுவாகல/ வெலிகம குஷ்டராஜகல/ யடால
ii. திம்புலாகல மாரவீதிய/ புள்ளிகொட/ கல்விகாரை/ திவங்க சிலைமனை
iii. A - நீர்ச்சுவாலை/ பூவிதழ்
B - சிங்கம்/ யானை/ குதிரை/ எருது
C - அன்னப் பட்சிகளின் வரிசை
D - மலர்ந்த தாமரைப்பூவின் ஒரு பகுதி

(04) i. விஜயராஜசிங்க/ ஸ்ரீ விக்ரமராஜசிங்க/ ராஜாதிராஜசிங்க
ii. படிக்கட்டு முறையில் அமைக்கப்பட்ட வயல்களில் விவசாயம் செய்யப்படல், மழை நீரை நம்பிய விவசாயம், சேனைப் பயிர்ச் செய்கை காணப்படல், வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை, விலங்கு வளர்ப்பு
iii. தம்புள்ள, தெகல்தொருவ, தலதாமாளிகை, முல்கிரிகல

(05) i. பாதுவா/ பொலஞ்ஞா/ பரிஸ்/ ஒக்ஸ்போர்ட் கேம்பிரிஜ்

ii. வட்டமான வில்வளைவு/ உயர்ந்த கோபுரம்/ அரை வட்டத்துடனான சிகரம்

iii. A - ஜொஹன்னர் கூட்டன் பேர்க்
B - மைக்கல் ஆஞ்சலோ
C - நிக்கலஸ் கொபர்னிகஸ்
D - ஜொஹன்னஸ் கெப்லர்

(06) i. போர்த்துக்கல், ஸ்பானியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஒல்லாந்து

ii.
- ஆசியாவின் வர்த்தகத்தினை தம்வசம் ஏற்கவும்.
- முஸ்லிம்களிடம் காணப்பட்ட வர்த்தக ஏகபோக உரிமையை தம்வசம் வைத்துக் கொள்ளல்.
- தமது சமயத்தைப் பரப்புவதற்கு.

iii. A - வாஸ்கோடகாமா
B - போர்த்துக்கல்
C - இந்தியா
D - கள்ளிக்கோட்டை

(07) i. கொன்ஸ்தைந்து த சுசா
பெரோலோபேஸ் த சுசா
தியோகுத மெல்லோ

ii.
- மாயாதுன்னையினதும் முதலாம் இராஜசிங்கனதும் வீரம்.
- தந்ததாது சீதாவாக்கைக்கு கொண்டு செல்லப்படல்.
- சீதாவாக்கை மன்னர்கள் பின்பற்றிய போர்த்துக்கேய எதிர்ப்புக் கொள்கை.
- கோட்டே இராச்சியத்தின் வீழ்ச்சி.

iii.
- கத்தோலிக்க சமயத்தைத் தழுவியோருக்கு சலுகை அளித்தல், அரசாங்க பதவிகள் கொடுப்பனவுகள் வழங்குதல்.
- வரிகளிலிருந்து விடுவிப்பு வழங்குதல்.
- உயர் கல்வி அளித்தல்.
- மக்களின் மனதைக் கவரும் சிறு விழாக்கள் ஊர்வலங்கள் என்பவற்றை ஒழுங்கு செய்தல்.

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank